# அறிவித்தல்

## 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழ் உயர்கல்விப் பிரிவுடன் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் தகவல் அலுவலரிடம் RTI 01 எனும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் கட்டாயமில்லை.

தகவல் அலுவலர்,

**பெயர் - திருமதி அனோஜா பீ. குருகே**
**பதவி - மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)**
**முகவரி - கல்வி அமைச்சு**
**உயர்கல்வி பிரிவு**
**இலக்கம்: 18, வோர்ட் பிளேஸ்**
**கொழும்பு 07**
**தொடர்புகொள்ள முடியுமான தொ.பே.இல. - 0112688338**
**மின்னஞ்சல் முகவரி - addsec-admin@mohe.gov.lk**

1. தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு RTI01 விண்ணப்பப் படிவம் அல்லது வாய்மொழி மூலமான கோரிக்கையை தகவல் அதிகாரியிடம் சமர்ப்பித்து அது கிடைக்கப்பெற்றமைக்கான கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
2. உங்களுடைய கோரிக்கை தொடர்பான தகவல்களை கூடியவிரைவில் வழங்கப்படுவதுடன், எவ்வாறாயினும் 14 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.
3. கோரப்படும் தகவல்களை உங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்தால், ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் கட்டணமொன்றை செலுத்த வேண்டுமாயின் அது பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும். தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு கட்டணமொன்றை செலுத்த வேண்டுமாயின் அந்தக் கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் அல்லது கட்டணமொன்றை செலுத்தத் தேவையில்லையாயின் கட்டணமின்றி 14 நாட்களுக்குள் தகவல்கள் பெற்றுத்தரப்படும்.
4. கட்டணம் செலுத்தியதன் பின்னர் 14 நாட்களுக்குள் தகவல்களை வழங்குவதற்கு சிரமமாக இருப்பின் தகவல் அலுவலர், காலத்தை நீட்டிப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு நீங்கள் கோரிய தகவலை 21 நாட்களுக்குள் உங்களுக்கு வழங்குவார்.
5. தகவலுக்கான கோரிக்கையை பிரஜையொருவரின் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்புடையதாக இருந்தால், கோரிக்கை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் கோரிக்கைக்கு பதில் அளிக்கப்படும்.

6. தகவலுக்கான கோரிக்கையுடன் தொடர்பாக,
    I. தகவலுக்கான எந்தவொரு கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளுதல், நிராகரித்தல்.
    II. சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல்களின் காரணமாக எதேனுமொரு தகவலை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை நிராகரித்தல்.
    III. சட்டத்தில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைகளுடன் இயைந்திராமை.
    IV. பூரணமற்ற, தவறான அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல்.
    V. அதிக கட்டணத்தை அறவிடுதல்.
    VI. கோரப்படும் வடிவில் தகவல்களை வழங்குவதனை தகவல் அலுவலர் நிராகரித்தல்.
    VII. தகவல்களைக் கோரும் பிரஜை குறிப்பிட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதனைத் தடுப்பதற்காக அந்தத் தகவல்களை சிதைத்தழித்து அல்லது காணாமற்போகச் செய்தள்ளதாக தகவல்களைக் கோரும் பிரஜைக்கு நியாயமான காரணங்கள் இருத்தல்.

காரணமாக அதிருப்தியடைவாராயின் கீழ் குறிப்பிடப்படும் தகவல் அலுவலருக்கு 14 நாட்களுக்குள் மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்கவும்.

பெயர் குறித்த அலுவலர்,

**பெயர் - திருமதி வசந்தா பெரேரா**

**பதவி - செயலாளர்**

**முகவரி - கல்வி அமைச்சு**
**உயர்கல்வி பிரிவு**
**இலக்கம்: 18, வோர்ட் பிளேஸ்**
**கொழும்பு 07**

**தொடர்புகொள்ள முடியுமான தொ.பே.இல. - 0112784136**

**மின்னஞ்சல் முகவரி - secretary @mohe.gov.lk**

7. இந்த அறிவித்தலின் 6 ஆம் பிரிவிற்கமைய மேன்முறையீட்டை சமர்ப்பிக்கும்போது கீழ் குறிப்பிடப்படும் RTI10 விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும். RTI10 விண்ணப்பத்தை நிரப்புதல் கட்டாயமில்லை. தகவல்களைக் கோருபவருக்கு RTI10 விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேன்முறையீட்டை விசாரிப்பதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்களைக் குறிப்பிட்டு கடிதமொன்றினூடாக மேன் முறையீட்டைச் சமர்ப்பிக்க முடியும்.